05.02.2026

O.S.No. **81/2022**

PW1- **அசன்கனி – த/பெ. காட்டுபாவா ராவுத்தர்**

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.02.2026.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)

5. இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான்.

6. நான் பிராது 1ம் தபசில் சொத்தை கடந்த 12.04.2016ம் தேதி கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

7. பிராது 2ம் தபசில் சொத்தை 01.09.2015ம் தேதி வா.சா.ஆ.2ன் மூலம் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

8. பிராது 3ம் தபசில் சொத்தை 1ம் பிரதிவாதி கடந்த 27.11.2008ம் தேதி வா.சா.ஆ.3ன் மூலம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

9. 1ம் பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற சொத்தில் 2020ம் வருடம் வீடு கட்டி தென்பக்கம் சுற்றுச்சுவர் அமைத்தார் என்றால் சரிதான்.

10. நான் கிரையம் பெற்ற சொத்தின் எல்கை மால்களுக்குள் கண்ட இடத்தை பிரதிவாதி இடைஞ்சல் செய்யக்கூடாது எனக் கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

11. எனக்கு எழுத படிக்கத் தெரியுமா என்றால் சரளமாகத் தெரியாது.

12. வா.சா.ஆ.1 நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.1 பத்திரத்தில் வடக்கில் 23 அடி அகலமுள்ள எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்ட பொது நடைபாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது தவறான எல்கை மால் ஆகும்.

14. வா.சா.ஆ.1 பத்திரத்தில் கிழக்கில் 23 அடி அகலமுள்ள தென்வடல்ரோடு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15. என் இடத்திற்கு வடபுறம் உள்ள பொதுநடைபாதை எனக்கும் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

16. 1ம் பிரதிவாதி வீட்டு கதவானது பாதையை நோக்கி உள்ளது என்றால் சரிதான்.

17. நான் கட்டிய வீட்டிற்கு தென்காசி நகராட்சியில் அனுமதி பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

18. என்னிடம் காண்பிக்கப்படுவது தென்காசி நகராட்சியால் என் வீட்டிற்கு வழங்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கான புளூ பிரிண்ட் மற்றும் உத்தரவு என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது.

19. வா.சா.ஆ.5 ஆவணத்தில் என் வீட்டிற்கு வடபுறம் 7 மீட்டர் அளவுள்ள பொது நடைபாதை உள்ளது என்றால் சரிதான். ஆனால் ஸ்தலத்தில் இடம் இல்லை.

20. பிரதிவாதிக்கு தென்புறம் கண்ட பாதையைத் தவிர வேறு பாதை இல்லை என்றால் சரிதான்.

21. சாட்சியிடம் புகைப்படம் காட்டி குறுக்குவிசாரணை செய்யப்பட்டது. சாட்சி புகைப்படத்தை ஒப்புக்கொண்டதால் புகைப்படம் மற்றும் குறுந்தகடு பி.வா.சா.ஆ.1 ஆக ( 10 எண்ணங்கள்) குறியீடு செய்யப்படுகிறது.

22. என்னிடம் காண்பிக்கப்படும் முதலாவது புகைப்படத்தில் புளூ செட்டிற்கு பின்னால் உள்ள வீடு 1ம் பிரதிவாதி வீடு. புளூ செட்டிற்கு எதிரே உள்ள வீடு என் வீடு என்றால் சரிதான்.

23. 1வது புகைப்படத்தில் ரோடு உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றா'ல சரிதான்.1ம் பிரதிவாதி காவல் துறையில் பணிபுரிவதால் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து ரோடு போட்டார்.

24. தென்காசி நகராட்சியால் ரோடு போட்ட போது நான் ஏன் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் வெளியூரில் இருந்ததால் ஆட்சேபனை செய்ய இயலவில்லை. ஊரில் இருந்து வந்த பின் ஏதேனும் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை.

25. 2வது புகைப்படத்தில் காணப்பட்டவாறு என் வீட்டிற்கு கீழ்புறம் தென்காசி நகராட்சியால் ரோடு போடப்பட்டது என்றால் சரிதான்.

26. பொதுவாக 5 அடி பாதை என்றால் வாகனம் செல்வது கடினம் என்றும் நகராட்சியால் 5 அடிக்கு ரோடு போட அனுமதி வழங்க மாட்டார்கள் என்றும் ஸ்தலத்தில் உள்ள ரோடு 23 அடி தான் என்றால் சரியல்ல.

27. 1ம் பிரதிவாதி அவரது கிரைய இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றும் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டவில்லை என்றால் சரியல்ல.

28. நீதிமன்ற ஆணையர் ஸ்தலத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான்.

29. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

30. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற இடம் தற்போது புல எண். 22/1ஏ என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

31. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த தென்காசி நகராட்சியால் வழங்கப்பட்ட புலவரைபடத்தில் என் வீட்டிற்கு வடக்கே 7 மீட்டர் அகலமுள்ள நடைபாதை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

32. என் வீட்டிற்கு வடபக்கம் 11 அடி காலிமனை உள்ளது என

வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

33. என் பிராதில் எப்போது பிரதிவாதி 5 அடியை ஆக்கிரமித்து சுவர் கட்டினார் என குறிப்பிடாதது எந்த ஆக்கிரமிப்பு பிரதிவாதிகள் செய்யவில்லை என்பதால் என்னால் குறிப்பிட்ட தேதி சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல.

34. நான் தாக்கல் செய்த அசல் பிராதில் வடக்கு பக்கம் எல்கை மால் ஆக 23 அடி என குறிப்பிட்டுவிட்டு அந்த 23 அடியை பேனாவால் திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

35. வா.சா.ஆ.1 பத்திரத்தை சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் வா.சா.ஆ.1 எழுதிக் கொடுத்தவர் இறந்து விட்டதால் நடவடிக்கை எடுக்கவில்லை.

36. வா.சா.ஆ.1ல் கூடுதல் அளவுகளுடன் எழுதப்பட்டது என்றும் ஸ்தலத்தில் வா.சா.ஆ.1ல் கண்டவாறு அளவுகள் இல்லை என்றும் வா.சா.ஆ.1 எல்கை மாலின் அடிப்படையில் என் வீட்டிற்கு வடக்கே 23 அடி நடைபாதை உள்ளது என்றும் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யாததால் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி